## வேதஸ்வரங்களில் சில ஆராய்ச்சிகள்

26—12—70ல் P. B. A. எழுதியது

வேதத்தில் லக்ஷக்கணக்கான பதங்கள் ஓதப்பட்டு வருகின்றன. இவற்றின் ஸ்வர ஸந்நிவேசம் ஒரே விதமாக இல்லை. ஒரே பதமானது ஸ்தல பேதத்தினால் வெவ்வேறு விதமான ஸ்வரத்தோடு கூடியதாக ஓதப்படா நின்றது. இந்த ஸ்வர பேதம் எல்லாப் பதங்களிலுமில்லை; அனேக பதங்களில் காண்கிறோம். இத்தகைய பேதம் எதனால்? என்று விமர்சிக்க வேணும் இங்குச் சிலர் கருதுவதென்னவென்றால், ஸ்வதந்த்ரமான வேதத்தில் இதைப் பற்றி விமர்சனம் செய்வதற்கு நமக்கென்ன அதிகாரம்? ஸ்வதந்திரனான வேத புருஷன் தன்னிஷ்டப்படி ஸ்வரங்களை அமைத்திருக்க, அதற்குக் காரண விமர்சம் செய்ய முடியாது என்று; இத்தகைய கருத்துக் கொண்டவர்கள் சிலர் மட்டுமல்ல; பெரும்பான்மையானவர்கள் என்னலாம். இக்கருத்து யுக்தமல்ல. இங்கு நம்முடைய விமர்சத்தை வைதிக வித்வான்களின் முன்னிலையில் ஸமர்ப்பிக்கிறோம். அவர்கள் குண தோஷங்களை விமர்சிக்கக் கடவர்கள்.

தைத்திரீய ஸம்ஹிதையில் முதல் அநுவாகத்தை யெடுத்துக் கொள்வோம். அதாவது • இஷே த்வோர்ஜே த்வா • என்கிற அநுவாகம். நாற்பத்துமூன்று பதங்கள் கொண்ட இவ்வநுவாகத்தில் ஓரெழுத்துப் பதங்கள் பதினொன்றும், ஈரெழுத்துப் பதங்கள் பன்னிரண்டும், மூவெழுத்துப் பதங்கள் பத்தும், நாலெழுத்

துப் பதங்கள் எட்டும், ஐயெழுத்துப் பதங்கள் இரண்டுமாக (43) பதங்கள் உள்ளன. இப் பதங்களின் ஸ்வரத்தில் நம்முடைய விமர்சம் கேளீர். இவற்றில், த்வா, வ:, ஆ, ப்ர என்கிற ஒரெழுத்துப் பதங்கள் எங்கும் நியமேந ஏகஸ்வரயுக்தங்களே யொழிய ஓரிடத்திலும் இதர ஸ்வரம் கிடையாது. ஆகவே இப்பதங்களில் விமர்சம் அநபேக்ஷிதம், *ஸ த்வா் அத்வர்யுஸ் ஸ்யாத்* என்ற விடத்தில் த்வா என்பது அநுதாத்தமாக இல்லையேயென்று வைதிகர்கள் நினைக்கமாட்டார்கள். அங்கு து வை என்கிற இரண்டு பதங்கள் சேர்ந்திருப்பதனாலே பதசரீரம் த்வா என்பதல்ல என்று தெளிவது. மா என்கிற பதம் பல இடங்களில் அநுதாத்தமாயும் பல இடங்களில் உதாத்தமாயுமிருக்கும். இந்த பேதத்திற்கு நியதமான காரணமுண்டு. என்னை யென்கிற பொருளில் வரும் மா என்பது நியமேந அநுதாத்தம். நிஷேதார்த்தத்தில் வரும் மா என்பது நியமேந உதாத்தம். *பாஹி மா மா மா ஹிம்ஸீ:* என்னுமிடத்தை யெடுத்துக் கொள்வோம். இங்கே (மா) என்கிற பதம் அடுத்தாப்போல் மூன்று விசையுள்ளது. ஓரிடத்தில் மட்டும் உதாத்தம்; இரண்டிடத்தில் அநுதாத்தம். மா பாஹி—என்னை ரக்ஷிக்கக் கடவாய்'; மா மா ஹிம்ஸீ: - என்னை வருத்தச் செய்யாதே. என்று பொருளாதலால் ஸ்வர பேதம் காரணத்தோடு கூடியதென்று தெரிந்து கொள்ளலாம். மா சந்த: என்ற விடத்திலுள்ள மா என்கிற பதம் நிஷேதார்த்தகமன்று; ஒரு ச்சந்தோ விசேஷ வாசகம்.

(ஸ்த) என்கிற பதத்தைப்பற்றி விளக்கம் கேண்மின். இது திஙந்தபதம். திஙந்த பதங்களுக்கு அநுதாத்தஸ்வரம் ஔத்ஸர்க்கிகம்; அது உதாத்தமாவதற்கு யோஹி ப்ராப்தி முதலான காரண விசேஷங்களுண்டு; "யே தேவா திவ்யேகாதச ஸ்த. ஆபோஹிஷ்டா மயோபுவ:" என்பன போன்ற இடங்களில் யச்சப்தமும் ஹி என்பதும் இருப்பதினாலேயே ஸ்த என்பது உதாத்த ஸ்வரமடைந்துள்ளது, ப்ரக்ருதத்தில் *வாயவஸ்ஸ்தோபாயவஸ்ஸ்த* என்னுமிடத்தில் யோஹிப்ராப்தி யில்லாமையினால் திஙந்த பதங்களுக்கு ஔத்ஸர்க்கிகமான அநுதாத்தஸ்வரம் மாறுபடாமலிருக்கின்றது.

திஙந்தபதங்களைப் பற்றியே மிக விரிவாகத் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த இஷேத்வாநுவாகத்தில் மற்றும் சில திஙந்தபதங்கள் உள்ளன; ஸ்யாத, பாஹி, ப்யாயத்வம், ஈசத, வ்ருணக்து, அர்ப்பயது - இந்த திஙந்தங்களெல்லாம் ஔத்ஸர்க்கிகமான அநுதாத்த ஸ்வரங்கொண்டேயிருப்பது காணலாம். யோஹிப்ராப்தியாகிற நிமித்த விசேஷமிருந்தால் இவற்றில் உதாத்தஸ்வரயோகம் தவறாமல் நேர்ந்தே தீரும். ஸ்யாத் என்கிற திஙந்தபதம் அநுதாத்தமாகப் பலவிடங்களிலும், உதாத்தமாகப் பலவிடங்களிலும் வருவதைக் கண்டிருக்கிறோம். அநுதாத்தமாக வருமிடங்களில் காரண விசாரம் வேண்டியதில்லை. உதாத்தமாக வந்தால் நாம் கீழே விவரித்த காரண விசேஷம் இருந்தே தீரும். பாஹி என்கிற திஙந்தபதம் ஸர்வாநுதாத்தமாயும் அந்தோதாத்தமாயும் பல விடங்களில் வரும். ப்ரக்ருதத்தில் (பசூந் பாஹி) என்னுமிடத்தில் ஸர்வாநுதாத்தம். இது நிர்விசாரம்; (பாஹி யஜ்ஞம், பாஹி யஜ்ஞபதிம், பாஹி மாம் யஜ்ஞநியம்) என்பன போன்ற விடங்களில் அந்தோதாத்தமாயிருப்பதற்கு என்ன நிமித்தமென்றால், அது முக்கிய

மாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம். கேண்மின்; வாக்யாதியிலும் பாதாதியிலும் எந்த பதமும் ஸர்வாநுதாத்தமாக வராது என்பது நியதம். இந்த நியமத்தை எவ்வளவும் பரிசீலித்துப் பார்க்கலாம். பாஹி யஜ்ஞம், பாஹி யஜ்ஞபதிம், பாஹி மாம் யஜ்ஞநியம் என்ற விடம் மூன்று வாக்யங்கள் இங்கு பாஹி என்பது வாக்யாதியிலேயுள்ளது; ஆகவேதான் உதாத்த ஸ்வர யோகமாயிற்று. அதுவே, யஜ்ஞம் பாஹி. யஜ்ஞபதிம் பாஹி, யஜ்ஞநியம் மாம் பாஹி என்றிருக்குமானுல் பாஹியென்பது ஸர்வாநுதாத்தமாகவே யிருக்கும். அதற்கு உதாஹரணம் (பசூந் பாஹி) என்கிற ப்ரக்ருத ஸ்தலமே போதும். திஙந்த பதங்களில் 1, 2, 3 உபஸர்க்கங்கள் சேர்ந்து ஸமாஸமாகியுள்ள விடங்களில் காணும் ஸ்வர பேதங்களைப் பற்றி விரிவாக எழுதவேண்டியதுண்டு; அது நாமெழுதிய வேதலக்ஷண க்ரந்தங்கள் பலவற்றில் விரிவாகக் காணத்தக்கது. நாம் செய்த விமர்சங்களில் அதுவே முக்கியமானது.

இப்போது நாம் எடுத்துக் கொண்ட இஷேத்வாநுவாகத்தில் உள்ள இரண்டெழுத்துப் பதங்களில் இஷே ஊர்ஜே, ஸ்தேந: ஹேதி:. பரி, பஹ்வீ:, த்ருவா:, பசூந் - என்னும் பதங்கள் எங்கும் இதே ஸ்வரமாகத்தான் வரும். ஸ்வரம் மாருது. தேவ: என்கிற பதத்தைப் பற்றி மட்டும் சிறிது தெரிவிக்கிறேன். இப்பதம் எங்கு வந்தாலும் அந்தோதாத்தமாகவே வரும். வேறு விதமாக வராது. காடகத்தில் •ச்ரத்தயாதேவோ தேவத்வ மச்நுதே• என்றவிடத்தில் தேவ: என்பது ஸர்வாநுதாத்தம்போல் தோன்றும். அப்படியல்ல. அங்கு அதேவ: என்றே பதவிபாகம்; உதாத்த ஸ்வரித ப்ரசயங்கள் கொண்ட பதமிது. இந்த பதம் ஸம்புத்தியாக வருமிடங்களில் ஸர்வாநுதாத்தமாக வரும். அதுவே வாக்யாதியில் வருமாகில் அந்தஸ்வரிதமாக வரும். நிமித்த விசேஷமில்லாமல் ஸ்வரம் பேதியாது.

அக்நியா: என்கிற பதத்தைப் பற்றி என்னுடைய விமர்சத்தைக் கேண்மின். இது ஸுபந்த பதம். மூன்றெழுத்துள்ள ஸுபந்த பதம் ஸர்வாநுதாத்தமாக எங்கும் வாராது. ஸம்புத்தியாக இருந்தால் மட்டும் வரும். இங்கு இது ஸம்புத்தியாகவுள்ளது. •ஏதாம் தே அக்நியே நாமாநி• என்ற விடத்தில் (ஏகவசனத்தில்) ஸர்வாநுதாத்தமாக வந்திருக்கிறது ஆகவே இங்கு பஹுவசநாந்தமென்று திண்ணமாக எண்ண வேண்டியது. ஆனதுபற்றியே விஸர்க்காந்தமாகவுமுள்ளது. இங்கு விஸர்க்க முண்டா இல்லையா என்று ஸந்தேஹமுண்டானுல் இது ஸர்வாநுதாத்தமாயிருப்பது கொண்டே விஸர்க்கமிருந்தே தீர வேணுமென்று நிச்சயிக்கலாம். விஸர்க்கமில்லையாகில் இதற்கு ஸர்வாநுதாத்தத்வம் அஸம்பாவிதமேயாகும்.

இந்த அநுவாகத்தில் ச்சாந்தஸவ்யத்யய முண்டா என்று பார்க்குமளவில் ஊர்ஜஸ்வதீ:, பயஸ்வதீ:, ப்ரஜாவதீ:, பஹ்வீ:, என்கிற பதங்கள் பொருள்வகையில் ப்ரதமா பஹுவசநாந்தங்கள்; ஆதலால் ஊர்ஜஸ்வத்ய:, பயஸ்வத்ய:, ப்ரஜாவத்ய:, பஹ்வ்ய:, என்றிருக்கவேண்டும் அப்படி யில்லாமை ச்சாந்தஸ வ்யத்யயமாகும் பஹ்வீ: என்கிற பதத்தைப் பற்றித் தனிப்பட விசாரித்திருக்கிறோம், இத்தகைய வ்யத்யயம் வேதத்தில் அடிக்கடி வரும். அது வேறு விஷயம். எந்த வ்யத்யயமும் ஸம்ஹிதையிலுண்டே யல்லது பதபாடத்தில் கிடையாது. விஸ்தரப்ரியா: விரம்யதே.